**செய்தி வெளியீடு எண்: 159** **நாள்: 23.02.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (23.2.2019) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஜெயம் 2019–நிறுவனர் தின விழாவில் ஆற்றிய உரை**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,**

இசை மற்றும் நமது கலைகளை பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி என்ற முறைகளில் மக்களிடையே கொண்டு செல்லவும், அடுத்த தலைமுறைக்கு நமது பராம்பரிய கலைகளை நிலைநிறுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் **ஜெயம் 2019–நிறுவனர் தின விழா** நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவில் சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
**அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும்
நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர்
**அண்ணன் திரு. டி.ஜெயகுமார் அவர்களே!**

மற்றும்
இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு தலைமையேற்று உரையாற்றிய
மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ்ப் பண்பாட்டு துறை அமைச்சர்
**சகோதரர் திரு. க.பாண்டியராஜன் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்
**சகோதரர் திரு.கடம்பூர் ராஜூ அவர்களே!**

நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
**சகோதரர் திரு.உதயகுமார் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்
**டாக்டர் ஜெ.ஜெயவர்தன் அவர்களே!**

மற்றும்

வருகை தந்திருக்கின்ற
தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே!

சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை
அரசுச் செயலாளர் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள
தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை
பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்
**முனைவர் பிரமீளா குருமூர்த்தி அவர்களே!**

பல்கலைக்கழகத்தின் ஆசிரியப் பெருமக்களே! அலுவலர்களே!
இப்பல்கலைக்கழகத்தின் உயிர்நாடியாக விளங்கும்
மாணவ, மாணவியரே!
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
இசையை வளர்ப்பதில் பேரார்வம் கொண்டு ஆதரவு நல்கும் பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வில் நாணிலிருந்து எழுந்த ஓசையிலிருந்து யாழும், வண்டு துளைத்த மூங்கிலின் வழியே காற்று புகுந்து எழுந்த நாதத்தால் குழலும், இயற்கை வழி வந்ததே இசை. **'தமிழோடு இசைப் பாடல் மறந்தறியேன்'** என்கிறார் திருநாவுக்கரசர். **'ஏழிசையாய் இசைப் பயனாய்'** என்று இறைவனை வியக்கிறார் சுந்தரர்.

மனிதன் மனிதனாக வாழ்ந்தால் அவன் கடவுளாகவே கருதப்படுவான். அந்த மனிதத் தன்மையை அடைவதற்கு முதலில் நாம் எல்லோரும் ஒன்று என்ற எண்ணம் உண்டாக வேண்டும். நம் எல்லோரையும் ஒன்ற வைக்கும் ஆற்றல் இசைக்கு உண்டு. நாம் எல்லோரும் பல வகையில் வேறுபட்டு இருந்தாலும், ஒருவர் பாடும்போதோ அல்லது இசைக் கருவியை இசைக்கும் போதோ அதில் ஒன்றி, அனைவரின் கண்களில் நீர் பெருகுவதைக் காண்கிறோம். இசைக்கு நம் அனைவரையும் ஒருங்கிணைக்கும் சக்தி உண்டு என்பதை இது தெளிவாக்குகிறது.

பொதுவாக, இசை நம் தமிழ் குடும்பங்களில் ஒன்றிப்போன ஓர் அம்சமாகும். சின்னஞ் சிறு குழந்தையை தூங்க வைக்க, தொட்டிலில் குழந்தையை போட்டு தாய் தாலாட்டு பாடுவதும் இசை.

வயல்களில் வேலை செய்பவர்களும், கடின வேலை செய்பவர்களும் தங்கள் களைப்பை மறக்க பாடுவதும் இசை. கோவில்களிலும், மங்கல விழாக்களிலும் இசைப்பதும் இசை.

எல்லா சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பாடல்கள் மற்றும் வாத்தியங்களை வகுத்து திறம்பட இசையை கையாண்டவர்கள் நம் முன்னோர்கள்.

காதில் இன்பத் தேனைப் பாய்ச்சுகிறது இசை! அந்த இசையின் ஒலி இதயத்தில் எதிரொலிக்கிறது. அதோடு உடல் முழுவதும் பரவுகிறது. ஒவ்வொரு நரம்பையும் தட்டி எழுப்புகிறது. பரவசம் ஊட்டுகிற ஓர் அபூர்வமான மின் சக்தியாகி, நம்முடைய உடலின் ஒவ்வொரு அணுவையும் தீண்டி, ஒரு விதமான மலர்ச்சியை–நெகிழ்ச்சியை பூரிப்பை உண்டாக்கி நம்மை தன்வசப்படுத்திக் கொண்டு விடுகிறது.

சோர்வை உற்சாகமாக்குகிறது;
கவலையை களிப்பாக மாற்றுகிறது;
கோபத்தை சாந்தப்படுத்துகிறது;
பகையை நட்பாக்கிறது.

இவை அனைத்தும் இசைக்கே உள்ள சக்தியாகும்.

கர்நாடக இசையின் மும்மூர்த்திகளாகத் திகழ்ந்தவர்கள் தியாகராசர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவரும். உலகத்தில் இசையை ரசிக்கின்ற அனைவருக்கும் இவர்கள் மூவரும் சொந்தமானவர்கள். தமிழ் தியாகய்யா என்று போற்றப்படும் பாபநாசம் சிவன், அரிகேசநல்லூர் முத்தைய்ய பாகவதர், கோபாலகிருஷ்ண பாரதியார், முத்து தாண்டவர் ஆகியோரின் பாடல்களை கேட்கும்போது, இசையின் இனிமையோடு பொருளையும் அறிய வாய்ப்பு ஏற்படுகிறது.

தமிழ்நாட்டில் பிறந்து, தமிழிலேயே பாசுரங்கள் இயற்றிய பன்னிரு ஆழ்வார்கள் வழங்கிய நாலாயிர திவ்யபிரபந்தம், சைவ சமயக்குரவர்கள் என்று அழைக்கப்படும் அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோர் அருளிய தேவாரம் மற்றும் திருவாசகத்தை இசை வடிவங்களாக நான் மிகவும் ரசித்துக் கேட்டிருக்கிறேன்.

தமிழிலே மாபெரும் கவிஞர்கள் பல கவிதைகளை இயற்றியிருக்கிறார்கள். அவர்களின் கவிதைகள் இசையுடன் பாடப்படும் போது அக்கவிதைகள் மக்களை எளிதாக சென்றடைகிறது.

‘‘**துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ**
**இன்பம் சேர்க்க மாட்டாயா**’’

என்றும், “**தமிழுக்கும் அமுதென்று பேர்**” என்றும் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய கவிதைகளும்,

“**சின்னஞ்சிறு கிளியே**’’ என்ற மகாகவி பாரதியாரின் கவிதையும் இசையோடு சேரும் போது, புதிய பரிமாணத்துடன் வெளிப்படும் அதன் உணர்வு அலாதியானது.

எந்த ஒரு கலையும் ஆற்றின் நீரோட்டம் போல ஓடிக்கொண்டிருக்க வேண்டும். தேங்கிப் போனால் அதனுடைய அழகும், இனிமையும் குறைந்து போய்விடும். இந்தக் கருத்து இசைக்கும் பொருந்தும்.

கலையும், பண்பாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. தமிழகத்தின் மரபு கலைகளின் வழியாக பண்பாட்டினை பாதுகாத்திட வேண்டும்

என்ற உயரிய நோக்கத்திற்காகவும், இசைக்கலை, நாடகக்கலை, நாட்டியக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றை இளைய தலைமுறையினருக்கு இசை மற்றும் கவின்கலைக் கல்வி பயிலகங்கள் வாயிலாக கொண்டு செல்லவும், இக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த ‘கலை பண்பாட்டுத் துறை’ என்ற ஒரு தனித்துறை டிசம்பர் மாதம் **1991** ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்று இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தை தோற்றுவித்தவரும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, திருவையாறு ஆகிய இடங்களில் இசைக் கல்லூரிகளும், பல்வேறு இடங்களில் இசைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. சில இடங்களில் மாலை நேர இசைக் கல்லூரிகளும் மற்றும் பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள் இசை மற்றும் நாட்டியத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அதிலே சாதனையும் படைத்துள்ளார்கள்; இதைக் காணும் போது, ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது.

நாட்டிய நட்சத்திரமாக வேண்டும் என்ற அவரது தாயின் ஆசைப்படி, ‘பரதம்’ ‘கதக்’ என்று நாட்டியப் பயிற்சி தொடங்கினார் மாண்புமிகு அம்மா அவர்கள்.

நடனத்துடன் முறைப்படி சங்கீதமும் கற்றுக் கொடுக்க ஒரு வாத்தியார் ஏற்பாடு செய்யப்பட்டார். விடியும் முன்னே எழுந்து கண்களை கசக்கிவிட்டுக் கொண்டு வந்து பார்த்தால் பாட்டு வாத்தியார் திரு.கோபாலகிருஷ்ண சர்மா தயாராக இருப்பார். மாண்புமிகு அம்மா அவர்கள் முறைப்படி இசையைப் பயின்றார்கள். காலை நேரத்தில் பாடிப் பழகினால் குரல் நன்றாகப் பக்குவம் அடைந்து மெருகேறும். அதனால்தான் அவரது அம்மா காலையில் சங்கீதம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார். இதன் பயனாக மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல குரல்வளத்துடன் சிறப்பாக பாட ஆரம்பித்தார்கள்.

ஒரு சமயம் அடிமைப் பெண்ணில் கதாநாயகியாக நடித்து வந்த மாண்புமிகு அம்மா அவர்கள், பொழுதுபோக்காக ஒரு நாள் வேறொரு படத்திற்காக செட்டில் பாடிக் கொண்டிருந்ததை தற்செயலாக கேட்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அடிமைப்பெண் படத்தின் இசையமைப்பாளரை அழைத்து, ‘‘இந்தப் படத்தின் கதாநாயகியை சொந்தக் குரலிலே பாட வைக்கலாம் என்று நினைக்கிறேன்’’ என்றார். உடனே இசையமைப்பாளர், மாண்புமிகு அம்மா அவர்களை அழைத்து ஒரு ட்யூனைக் கொடுத்து பாடச் சொன்னார். அவரது இனிமையான குரலைக் கேட்ட, அடிமைப் பெண் படத்தின் இசையமைப்பாளர், அவரிடம் ஒரு பாடலைக் கொடுத்து பாடச் சொல்லி ஒலிப்பதிவு செய்தார். அந்தப் பாடல்தான் மக்கள் அனைவராலும் பாராட்டப்பட்ட ‘அம்மா என்றால் அன்பு’ என்றப் பாடல். அதன் பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைய படங்களில் தனது சொந்தக் குரலில் பாடினார்கள். அம்மா அவர்களின் இசைத் திறமையை வெளி உலகுக்கு கொண்டு வந்தவரும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆளுமையை அறிந்து, அரசியலில் தனது வாரிசாக கொண்டு வந்தவரும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தான்.

மாண்புமிகு அம்மா அவர்கள் நாட்டிய கலாநிகேதன் என்ற பெயரில் ஒரு நாடகக் குழுவினை நடத்தி வந்தார்கள். தமிழ்நாட்டின் பரத நாட்டியம், ஆந்திராவின் குச்சுப்புடி, கேரளத்தின் கதகளி, மாப்பிள்ளை ஆட்டம், அசாமின் மணிபுரி நடனம், பஞ்சாபின் பாங்கரா நாட்டியம், மத்திய பிரதேசத்தின் சாந்தாலி நடனம் இப்படி பல நடனங்களை அக்குழுவினர் ஆடி வந்தனர். இந்த குழுவினரின் முக்கியமான நாட்டிய நாடகம் **காவேரி தந்த கலைச் செல்வி** ஆகும். இந்த நாட்டிய நாடகம் மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது. பின்னர் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டிற்கு காவேரி மீட்ட கலைச் செல்வியாகத் திகழ்ந்தார் என்பதை சரித்திரம் பல நூற்றாண்டுகள் பேசும்.

மாண்புமிகு அம்மா அவர்களும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும், இயல், இசை, நாடகம் நன்கு வளர்ச்சியடைய பல்வேறு

திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நலிந்த கலைஞர்களுக்கும், கலைகளுக்கும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ் இசை, பஜனை இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை, மெல்லிசை, கிராமிய இசை மற்றும் மேற்கத்திய இசையை உள்ளடக்கிய கலைஞர்களை கொண்ட நகரமாக சென்னை விளங்குகிறது. மார்கழி மாதம் நடைபெறும் இசை விழாவில், இந்தியா மற்றும் வெளிநாட்டிலிருந்து கலைஞர்கள் பங்கேற்பதால் சென்னை மாநகரம் பெருமை பெற்றுள்ளது. இதனைக் காண எண்ணற்ற இசை ரசிகர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து சென்னைக்கு வந்து இசை விழா நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் கண்டு களித்து வருகிறார்கள். படைப்பாக்கம் மற்றும் இசைக்கான பங்களிப்பு ஆகியவற்றிற்கான சிறப்புப் பட்டியலில் தற்போது உலக அளவில் சென்னையை யுனெஸ்கோ அமைப்பு தேர்வு செய்து அங்கீகரித்துள்ளது.

இப்பல்கலைக்கழகம் தமிழ் இசை பாடல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நிகழ்ச்சிகளை அதிக அளவில் நடத்தி, மக்களுக்கு இசை எளிதில் சென்றடைய உறுதுணையாக இருக்கவேண்டும் என அன்போடு இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், தேவாரம் மற்றும் திருவாசகம் ஆகிய பாசுரங்களை இசை வடிவில் மக்களிடம் கொண்டு செல்வதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தத் தருணத்தில் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**